# சர்வவியாபி

MISSION PRESS 1840
PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

19-03-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் ( பங்குனி 5) | வருட சந்தா ₹ 200 | தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 60 | இதழ் 12 | பக்கம்-12



e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L. ஆரோக்கியதாஸ்


## திருத்தந்தையாக 10 ஆண்டுகளை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்

***அசிசி நகர புனித பிரான்சிஸின் பெயரை எடுத்துக்கொண்டு, ஏழைகளுக்காக வாழும் ஓர் ஏழைத் திருஅவையைக் கனவு கண்ட திருத்தந்தை பிரான்சிஸ்.***



2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதி, திருச்சபையின் 266ஆவது திருத்தந்தையாகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், புனித பேதுரு பெருங்கோவிலின் மேல்மாடத்தில் தோன்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தான் மற்றவர்களுக்கு ஆசீர் வழங்குவதற்கு முன்னர் தன்னை ஆசீர்வதிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டதுடன், தனக்காக அனைவரும் செபிக்குமாறும் விண்ணப்பம் விடுத்தது குறிப்பிடத்தக்கது. அநீதிகளாலும், வன்முறையாலும், போர்களாலும் பிளவுபட்டு நிற்கும் இவ்வுலகில் படைப்பை அன்புகூர்ந்து, அன்பின் மற்றும் ஏழ்மையின் மனிதனாக வாழ்ந்த அசிசி நகரின் புனித பிரான்சிஸின் பெயரை எடுத்துக்கொண்டு, ஏழைகளுக்காக வாழும் ஓர் ஏழைத் திருஅவையைக் கனவு கண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் நோக்கத்தில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளார் என்பதை சிந்திக்க இந்த பத்தாண்டு நிறைவு உதவும் என பலர் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்.

- 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதமே, தான் தெர்ந்தெடுக்கப்பட்ட சில மாதங்களிலேயே "Evangelii Gaudium" "நற்செய்தியின் மகிழ்ச்சி" என்ற திருமடலை வெளியிட்டு நற்செய்தியின் மகிழ்வுக்கு ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்கள் வாழ்வில் சான்று பகரவேண்டும், குறிப்பாக மன்னிக்கும், வரவேற்கும் மற்றும் அரவணைக்கும் கடவுளின் அருகாமையையும் கனிவையும் துன்புறும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என திருத்தந்தை கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.
- இயேசு சபையின் முதல் திருத்தந்தையும், தென் அமெரிக்கக் கண்டத்தின் முதல் திருத்தந்தையுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கர்தினால் ஹோர்கே மாரியோ பெர்கோலியோ அவர்கள், திருஅவையை கடந்த 10 ஆண்டுகளாக வழிநடத்தி, 111 புதிய கர்தினால்களை உருவாக்கியுள்ளார், 60க்கும் மெற்பட்ட நாடுகளுக்கு திருத்தூதுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.
- இத்தாலிக்குள் 35க்கும் மேற்பட்ட திருப்பயணங்களையும், உரோம் நகரின் ஆயர் என்ற முறையில் தன் மறைமாவட்டத்திற்குள் ஏறக்குறைய 150 மேய்ப்புப்பணி சந்திப்புக்களையும் மேற்கொண்டுள்ளார்.
- 1480ஆம் ஆண்டு திருமறைக்காக கொல்லப்பட்ட ஏறக்குறைய 800 மறைசாட்சிகள் உட்பட ஏறக்குறைய 900 இறையடியார்களை புனிதர்களாக அறிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இப்புதிய புனிதர்களுள் திருத்தந்தையர் இரண்டாம் ஜான் பால், 23ஆம் யோவான், ஆறாம் பவுல், அன்னை தெரேசா, பேராயர் ஆஸ்கார் ரொமேரோ, தேவ சகாயம் ஆகியோரும் அடங்குவர்.
- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த 10 ஆண்டுகளில் வெளியிட்ட திருத்தூது ஏடுகளுள் "Laudato Si" "இறைவா உமக்கே புகழ்" என்ற ஏடும், "Fratelli Tutti" "நாமனைவரும் உடன்பிறந்தோர்" என்ற திருமடலும் முக்கியத்துவம் வாய்ந்தவை.
- 2015ஆம் ஆண்டின் இறுதியில் இரக்கத்தின் ஆண்டை துவக்கிவைத்த திருத்தந்தை, 2011ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று பல்வேறு மோதல்களையும் துயர்களையும் சந்தித்துவந்த தென் சூடான் தலைவர்களை 2019ஆம் ஆண்டு திருப்பீடத்திற்கு வரவழைத்து நாட்டின் அமைதிக்காக அவர்களின் கால்களை முத்தமிட்டு வேண்டிக்கொண்டதும் சிறப்புமிக்கது.

தென் அமெரிக்காவின் அமேசான் பகுதியையும் அதன் பூர்வீக இன மக்களையும் காக்க உலக ஆயர் மாமன்றக்கூட்டத்தைக் கூட்டியது, பெருந்தொற்றுக் காலத்தில் கொட்டும் மழையில் தூய பேதுரு வளாகத்தில் தனியே நின்று செபித்து "ஊர்பி எத் ஓர்பி" ஆசீரை வழங்கியது, திருப்பீடத்தின் துறை ஒன்றிற்கு தலைவராக முதன் முறையாக, அதாவது சமூகத் தொடர்புத் துறைக்கு பொதுநிலையினர் ஒருவரை நியமித்தது, அருள்பணியாளர்கள் திருஅவையில் சிறார்களை தவறாக நடத்தியதற்கு மன்னிப்புக் கேட்டது, முதன் முறையாக இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தை கிரில் அவர்களைச் சந்தித்தது, ஆயர்களை நியமிப்பதில் சீனாவுக்கும் வத்திக்கானுக்கும் இடையே ஒப்பந்தத்தை உருவாக்கியது, "உடன்பிறந்த உணர்வுநிலை" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஏட்டில் இஸ்லாமிய தலைவர் Sheikh Ahmed al-Tayeb உடன் கையெழுத்திட்டது, உக்ரைனுக்கு எதிரான போரை இரஷ்யா துவக்கியபோது உரோம் நகரின் இரஷ்ய தூதரகத்திற்கு திடீரெனச் சென்று, இப்போர் குறித்த தன் கவலையை வெளியிட்டது, பெண்களின் பங்கேற்பை திருப்பீட நிர்வாகத்தில் அதிகரித்தது போன்றவைகளை திருத்தந்தையின் கடந்த 10 ஆண்டு பாதையின் வெற்றிப் பணிகளாகக் குறிப்பிடலாம்.

***Ad Multos Annos!***

ஆசிரியர் பேனா...

# உண்மை அன்புக்கு வெற்றி

**பெற்றோரின் ஓலம்:** பிள்ளையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பெற்றோருக்குத்தான் தெரியும் அதன் வ-யும் வேதனையும். தன் பிள்ளை தவறானப் பாதையிலே வழிநடந்து சீரழிந்து சின்னாபின்னமாகி சமுதாயத்தால் வெறுக்கப்படுவதை பார்க்கும் பெற்றோர் மனம் எவ்வளவு வேதனையுறும் என்பது அவர்களுக்குத் தான் தெரியும். 'பத்து மாதம் சுமந்து பெற்றேன்' என்று ஒரு தாய் கலங்கும்போது - அவள் பட்ட வேதனை யெல்லாம் அந்த வார்த்தையில் ஒடுங்கி ஒளிந்து கிடக்கின்றன. 'தோள்மேல் தூக்கி வளர்த்தேன்' 'மார்மேல் போட்டு வளர்ந்தேன்' என்று ஒரு தந்தை சொல்லும் போது அவருடைய உழைப்பெல்லாம் அதிலே வெளிப்படுகிறது. மொத்தத்தில் அந்த பெற்றோரின் அன்பு அந்த வேதனையின் குர-லே ஓலமிடுகிறது.

**ஆனந்த கண்ணீர்:** அதே பிள்ளை சமுதாயத்தால் போற்றப் பெற்று உயர்ந்து நிற்கும்போது இந்த பெற்றோரின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடும். அவர்கள் மனம் பெருமிதத்தால் விம்மி புடைத்து உயர்ந்து நிற்கும். அப்போது தாங்கள் பட்ட துன்பங்களைப் பற்றி பேசாமல் தன் பிள்ளையின் குணாதிசயங்களை பெருமைபட்டு பேசுவார்கள். தங்கள் துன்பத்தை மறந்து, அந்த பிள்ளையின் புகழ் மங்காமல் மரத்தின் வேர்போல மறைந்து நிற்பார்கள். இதுதான் உண்மை அன்பு.

**பணம் ஈடாகுமா?:** மகன்(ள்) தன் பெற்றோரின் பாசத்தையும் அன்பையும் மறந்து வசதி வாய்ப்புக்களிலே தங்களை மூழ்கடித்துக் கொள்வது இன்றைய உலகிலே சாதாரணமாகிவிட்டது. சிறந்த முதியோர் இல்லத்திலே சேர்த்து, அவர்களுக்கு உணவு, மருத்துவத்திறகு தேவையான பணத்தை கொடுத்துவிட்டால் தம் கடமை முடிந்துவிட்டது என்று பிள்ளைகள் எண்ணுகிறார்கள். பெற்றோர் அன்புக்கு இதுதான் விலையா? வளர்ப்பு நாய்கூட சொல்லும் 'இல்லை' என்று.

**காத்துக் கிடக்கும் நாய்:** திருப்பூர் மருத்துவமனை யொன்றில் நடந்த நிகழ்வாக சன் நீயூஸ் செய்தி கடந்த வாரம் வெளிவந்தது. நோயுற்ற ஒருவர் மருத்துவமனைக்கு வருகிறார், அவரோடு அவர் வளர்த்த செல்ல நாய் வருகிறது. அவரை அறுவை சிகிச்சைக்காக அரங்கிற்குள் அழைத்துச் செல்கிறார்கள். நாயும் அந்த அரங்குவரை வந்து, அரங்கின் வாச-லே படுத்துக்கொள்கிறது. தன்னை வளர்த்தவர் இறந்துவிட்டார் என்பது தெரியாமல், அவர் மீண்டும் வருவார் என்று அந்த இடத்தைவிட்டு நகராமல் அங்கேயே இன்னும் காத்துக்கிடக்கிறது. யார் அழைத்தாலோ, துரத்தினாலோ இடத்தைவிட்டு நகர்வதில்லை; இது அல்லவோ அன்பு என்று எல்லாரையும் வியக்க வைக்கிறது. பிள்ளை போல் வளர்ந்த ஐந்தறிவு உள்ள நாய்க்கு அன்பின் பாசம் தெரிகின்றபோது ஆறு அறிவுள்ள பிள்ளைக்கு எங்கே அன்பு?

**ஆஸ்கார் விருது:** முதுமலைக் காட்டிலே உயிருக்காக போராடிக் கொண்டிருந்த யானைக் குட்டியை பொம்மன், பெள்ளி என்ற தம்பதியினர் எடுத்து பராமரித்தனர். அதற்கு 'ரகு' என்று பெயரிட்டு தம் பிள்ளையைப் போல் வளர்த்தனர். ரகுவின் வளர்ப்பு ஆவணப்படமாக்கப்பட்டது. அந்த படத்திற்கு, திரையுலகின் உயர்ந்த விருதான 95வது ஆஸ்கார் விருது கிடைத்துள்ளது. இது நமக்கு பெருமை.

**கோபம் வரும்:** நம்மில் பலர் சாலையில் சுற்றித் திரியும் விலங்குகளையும் செல்லப் பிராணிகளையும் பெரும் செலவு செய்து அன்புகாட்டுகிறோம். ஆனால் வறுமையிலும், நோயிலும் தனிமையில் விடப்பட்ட மனிதரை அன்பு செய்ய அக்கறை கொள்வதில்லை. ஜீவ காருண்யம் என்று சொல்வோம். மனிதனை அன்பு செய்ய தவறி விடுகிறோம். இந்த உண்மையை சுட்டிக்காட்டினால் கோபம் வரும்; ஆனால் அதுதானே உண்மை. சடங்கு சம்பிரதாயம் என்றும், மதம், இனம் மொழி என்றும் பாகுபடுத்தி மனிதத்தை பங்கப்படுத்தும் செயல்கள் நம் மத்தியில் பெருகிக் கொண்டிருப்பது வேதனை; இது சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியை தடை செய்யும் செயல்.

**வாழ்வின் இலட்சியம்:** அடுத்த மனிதனை அன்பு செய்வதுதான் வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டும். அதுதான் வாழ்வின் பரிசு.

'***அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு***
***என்போடு இயைந்த தொடர்பு*** ' (குறள் 73).

**விவி-ய உண்மை:** பார்வையற்றவனை பாவியென்று ஒதுக்கிய மனிதனுக்கு பார்வை அளித்து மதிக்கப்பட வேண்டியவனாக்கினார் இயேசு. பாவத்தைக் கண்டு மனிதரை வெறுப்பவரே பார்வையற்றவர் என்பதை புரிந்து கொள்வது சமூக உறவுக்கும் வாழ்வுக்கும் நன்மை பயக்கும். பெண் என்பதாலும், சமாரியர் என்பதாலும் இருவகை புறக்கணிப்பால் கூனிக் குறுகிய சமாரிய பெண்ணை தன்னுணர்வு பெறச் செய்து, பெருமைப் படுத்தியது இயேசுவின் அன்பு. செல்வந்தனாக இருந்தாலும் வரி வசூ-ப்பவன் என்று சொல்-இழிவுபடுத்தப்பட்டவன் சக்கேயு. சமுதாயம் வெறுத்தவனையும் அன்பு செய்து அவனை நல்லவனாக்கியது இயேசுவின் கனிவான அன்பு. **மற்றவரைப் பற்றி அக்கறையும் அன்பும் கொண்டிருப்பது தான் வாழ்வின் வெற்றி;** இல்லையேல் அது தோல்வி. மத்தேயு நற்செய்தி 25.31-46 இந்த உண்மையை வ-யுறுத்துகிறது.

**ஏன் பிணக்குகள்:** கடவுளை அன்பு செய்வதற்கு ஈடான இரண்டாவது கட்டளை மற்றவரை அன்பு செய்வதே. உன்மீது அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவரை யும் அன்பு கூர்வாயாக (மத் 22.39). அன்பின் வழி வாழ வேண்டிய நாம் ஏன் பிணக்குகளையும் பிரிவினைகளையும், வெறுப்பையும் வளர்க்க வேண்டும்?

**வெற்றி:** உண்மையான அன்புக்கு கிடைக்கும் வெற்றி நம் **மனமாற்றம்.** நம்மை நாம் அன்பு செய்வதுபோல் அடுத்த மனிதரையும் அன்பு செய்ய மனமாற்றம் பெறுவோம்; வாழ்வில் வெற்றி வெறுவோம்.



26-03-2023

# நம்புவோர் வாழ்வர்



அருள்திரு. A. தெய்வநாயகம்
பங்குதந்தை, ஆற்காடு.

எசே 37:12-14 உரோ 8:8-11; யோவா 11:1-15

கடவுளின் அன்பு அளவற்றது. "நான் என் மக்களை கைவிட்டு விடவில்லை" என்று இறைவாக்கினர் எசேக்கியல் வழியாக நம்பிக்கை அளிக்கிறார். தூய பவுலடிகளார் ஊனியல்புக்கு ஏற்ப வாழாமல் கடவுளின் வார்த்தைக்கு ஏற்ப நாம் வாழ்ந்தால் தூய ஆவி நம்மில் செயலாற்றுவார் என்று வழி காட்டுகிறார். தூய்மையான பாதையில் நாம் வழி நடந்தால் இயேசுவை வாழ்வாக பெற்றுக் கொள்ள முடியும்.

## உயிர் தரும் உறவு

இயேசு தன் பணி வாழ்வு காலத்தில் எல்லோருடனும் அன்புடனும் நட்புறவுடனும் வாழ்ந்து காட்டினார். "இனி நான் உங்களை பணியாளர் என்று சொல்ல மாட்டேன்... உங்களை நான் நண்பர்கள் என்றேன்" (யோவா 15:15). "நான் கட்டளையிடுவதெல்லாம் நீங்கள் செய்தால் என் நண்பர்களாய் இருப்பீர்கள்" (யோவா 15:14). "நண்பர்களுக் காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13). இவ்வாறு இயேசு மனிதர்களோடு தனது முழுநிறை அன்பை வாரி வழங்கினார்.

## நண்பனின் மரணம்

மார்த்தா மரியா இவர்களின் சகோதரனும் இயேசுவின் நண்பனுமான இலாசர் நோயுற்றிருப்பதாக தகவல் அனுப்பப்படுகிறது. இயேசு பெத்தானியா வந்தபொழுது இலாசர் இறந்து விட்டார், இந்த செய்தியை இயேசு அறிந்து கொள்கிறார். ஒருவர் இறந்து விட்டால் அவரது வீட்டில் ஏழு நாட்கள், பதினாறு நாட்கள் என்று துக்கம் அனுசரிப்பார்கள். அந்த நாட்களில் மக்கள் கூட்டமாக இருந்து இழந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருப்பார் கள். அப்படிப்பட்ட கூட்டம் இலாசரின் வீட்டில் இருக்கிறது. இயேசு அங்கு வந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

## நம்புவோர் வாழ்வர்

இயேசு தன் பணி வாழ்வில் பல அருளடை யாளங்களை செய்துள்ளார். இலாசரை கல்லறையில் இருந்து உயிருடன் எழுப்பியது ஒப்புயர்வற்ற ஓர் அருள் அடையாளமாக காணப்படுகிறது. "மார்த்தா இயேசுவிடம் நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" என்று தன்னுடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாள். இயேசுவோ "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்" என்று உறுதிமொழி கூறுகிறார். இயேசு உடல் சாவை பற்றி பேசவில்லை. பிறந்த ஒவ்வொரு மனிதனும் இறக்க வேண்டும் என்பது நியதி. ஆனால் வாழ்வு என்பது இறப்போடு முற்றுப் பெறுவதில்லை. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு மனிதனின் வாழ்வு இறப்பிற்குப் பிறகும் தொடர்கிறது. அந்த வாழ்வை தருபவர் இயேசு. "அவரிடம் வாழ்வு இருந்தது" (யோவா 1:4), மக்கள் அனைவரும் வாழ்வு பெறும் பொருட்டு இயேசு இம்மண்ணில் பிறந்தார் ".... வாழ்வை பெரும் பொருட்டு, அதுவும் நிறைவாக பெரும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவா 10:10).

## யோவானின் நோக்கம்

(யோவா 11:43-44) இரண்டே வசனங்களில் ரத்தின சுருக்கமாக லாசரின் உயிர்ப்பு நிகழ்வை குறிப்பிடுகிறார். இயேசுவின் அரும்பெரும் செயல்களை விரிவாக எடுத்தியம்பி வியப்புணர்வை உருவாக்குவது அல்ல. மாறாக இச்செயல்கள் மூலம் இறைமாட்சி வெளிப்பட செய்து இயேசுவின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதே யோவானின் நோக்கமாக உள்ளது.



இறந்த லாசர் உயிர் பெற்றதற்கும் இயேசு உயிர்த்தெழுந்ததற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இலாசரின் வாழ்நாள் அதிகமாகிறது. ஆனால் அவர் மீண்டும் இறப்பார். மாறாக, இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு மாபெரும் வெற்றி. அது தீமையின் மீதும் சாவின் மீதும் இயேசு பெற்ற வெற்றி அவரது பாஸ்கா நிகழ்வின் நிறைவு. உயிர்த்தெழுந்த இயேசு காலம், இடம் ஆகியவற்றை கடந்தவர். உயிர்த்தெழுந்து அவரது உடல் அழியாதது, மாண்புக்குரியது, வலிமையுள்ளது, ஆவிக்குரியது "இறந்தோர் உயிர்த்தெழும்போதும் இவ்வாறு இருக்கும். அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர் பெற்று எழுகிறது" 1கொரி 15:42. இனி அவர் சாக மாட்டார். அவர் என்றும் வாழ்கிறார். அவர் நம்மோடு நமக்காக வாழ்கிறார்.

நமது வாழ்வில் ஒரு நாள் இறப்போம். நம் வாழ்வு மாறுபடுமே அன்றி அழிக்கப்படாது. உயிர் பெற்று எழும்போது நாமும் இயேசுவின் நிலையான வாழ்வை பெறுவோம். நமது நம்பிக்கையை மிகுதியாக்க வரம் வேண்டுவோம். இறைவனின் ஆசி என்றும் நம்மோடு.



**கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும் (யோவா 12:24)**



# இறை தரிசனம்

– சுவாமி ஆ. லூயிஸ்.



இறைவா உம் தரிசனம் தா, உம் திருமுகம் காட்டிட வா. படைப்பு முழுவதும் படைக்கின்றவரை பறைச் சாற்றுகின்றது. அவரது சாயலாக படைக்கப்பட்ட அவரது குழந்தைகளும் பல்வேறு விதங்களில் பறைச்சாற்றுவதை உணர்ந்து மகிழ்வோம், புகழ்வோம், போற்றுவோம். "இருக்கிறவர் நாமே" என்று மோயீசனுக்கு வெளிப்படுத்திய இறைவன் பல்வேறு வழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை வழிநடத்தி இறுதியில் தன் மகன் இயேசு வழியாக வெளிப்படுத்தி வருகின்றார். என்னைக் காண்பவன் இறைவனைக் காண்கின்றான் என்று வெளிப்படையாக கடவுளை மனித குலத்திற்கு அறிவித்தார்.

**படைப்பில் வெளிப்பாடு:** "இறைவா, நீர் இல்லாத இடமே இல்லை, நீர் தாமே உலகின் எல்லை." இஸ்லாமியர், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை இதுவே ஆகும் என்று பல் சமய உணர்வோடு உலகிலும், நமது நாட்டிலும் விசுவசித்து வாழ்வோம். இயற்கையின் வெளிப்பாடு இயல்பாக, எவ்வித வற்புறுத்தலும் இன்றி இடம் பெறுகின்றது. இயற்கை தனக்கென வாழாது மனித குலத்திற்கே வாழ்கிறது என்று இறைவனைப் புகழ்வோம், இயற்கையைப் பாதுகாப்போம். இயற்கையை நாம் பாதுகாத்தால், இயற்கை நம்மைப் பாதுகாக்கும். இயற்கையை சூரையாடினால், இயற்கை நம்மையும் சூரையாடும், கவனமாக விழிப்புணர்வோடு இருப்போம். தொழில்மயம் என்று இயற்கை மயத்தை மாசுபடுத்த வேண்டாம்.

**படைப்பின் தலைவி தலைவன்:** இறைவனுடைய சாயலாக கடவுள் ஆண்-பெண் இவர்களைத் துவக்கத்தில் படைக்கின்றார். தொடர்ந்து அன்னை மரியாள் வழியாக புது மனிதத்தை ஆவியின் வல்லமையில் பெற்றெடுக்கிறார். இறைவனுடைய சாயல் என்றால் மெய்மையும் (வாக்கு) அன்பும் (தூய ஆவி) நிறைந்ததாகும், உறவுடைமையாகும், குழுமம் ஆகும், உடன் படைப்பாளர்களாவர். சுதந்திரம் உள்ளவர்கள், சுய உணர்வுடமை உள்ளவர்கள், ஒருவரை ஒருவர் நிறைவு செய்பவர் ஆவர்.

தலைவன்–தலைவியாக படைக்கப்பட்டாலும், கடவுள் அருளிய சுதந்திரத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல், சுயநலத்தில் பாதையைப் பிரிந்தனர். இருப்பினும் இரக்கம் நிறைந்த கடவுள் தன் மகன் வழியாக நானே வாழ்வு, வழி, வாய்மை என்று நெறிப்படுத்தினார். இதைத்தான் திருச்சபை இன்றும் முயன்று வருகிறது. கடவுள் தன்னையும், தன் மகனையும், தூய ஆவியையும் முழுமையாகத் தந்து தனது பிள்ளைகளை வழி நடத்தி வருகிறார். ஆனால் அன்றாட அனுபவத்தைத் திருச்சபையிலும், பிறமறைகளிலும், பொது உடமையிலும் நாம் கண்டு வருகிறோம். இயேசுவைப் பின் சென்றால் யாருக்கும் தொல்லை இல்லை, பேரின்பமே கொடையாகும்.

**கிறிஸ்தவர்கள்:** திருமுழுக்கு பெற்றவர்கள் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர். அந்தியோக்கியாவில்தான் இயேசுவின் சீடர்களை "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்க ஆரம்பித்தனர். ஒரு கிறிஸ்தவன் இயேசுவைப் போல, என்னைக் காண்பவன் கடவுளைக் காண்கிறான் என ஒரு கிறிஸ்தவனைக் காண்கிறவன், கிறிஸ்துவைக் காண்கிறான் என்ற தகுதிக்கு ஏற்ப வாழ்ந்து திருச்சபையிலும், உலகிலும் சான்று பகர்வது முக்கியம். திருத்தூதர் பணியின் துவக்கத்தில் இருந்தது போல கிறிஸ்தவர்கள், துறவிகள், குருக்கள், திருஆட்சியாளர்கள் இன்றும் இருப்பது பெருமைமிக்கது. பலவீனங்களைப் பெரிதுபடுத்தாது, நல்லவைகளைப் பார்த்து பாராட்டி கிறிஸ்தவ சமூகத்தை வளர்த்தெடுப்போம். மிஷன் நாடாகிய இந்தியாவில் கிறிஸ்தவர்கள் துர்மாதிரிகை இல்லாது, எடுத்துக்காட்டுகளாய் வாழ வழி வகுப்போம், வாழ்வோம்.

# தலை தாழ்த்துகிறேன்



- வெட்டிவயல் வளவன்

ஆணிகள் சுமந்தவரை
ஆடைகள் இழந்தவரை
ஏனம் தருபவரை
உயிர்த்து எழுபவரை
வானவர் இரட்சகரை
ஊழியின் முதல்வரை
காணும் சிலுவைமுன்
தலையைத் தாழ்த்துகிறேன்.



சிலுவை சுமந்தவரை
சீரேன் உதவியவரை
தொழுதுவரும் இளந்தளிரை
ஆறுதல் சொல்-யவரை
உழுவலன்பு அன்னையின்
துயரில் பங்குற்று
சிலுவை இட்டபடி
சேவடி வாழ்த்துகிறேன்



ஐந்து காயத்தவரை
ஆணியில் தொங்கினவரை
இந்திர நீலமிடற்றாரை
பிழைபொறு என்றாரை
மந்திர முகத்தவரை
மரிமகன் திருமகனாரை
சிந்தையில் தினம்வைத்து
சிலுவையைப் போற்றுவேனே!








## ஆண்டவரே நம் ஆயர்



திருமதி. பிலோ ஜான்,
திருநெல்வே-

"ஆண்டவரை ஒரு ஆடு மேய்க்கும் ஆயனாக சொல்லலாமா?" என் மகள் கேட்டாள். உண்மைதான், இறைவனை ஒரு ஆடு மேய்ப்பவனாக எப்படி சொல்ல முடியும், ஆனால் அதுதான் உண்மை. ஆண்டவரே, "என் ஆடுகளை மேய்" என்றுதான் சொல்கிறார். ஆடு மேய்ப்பவன் தன் ஆடுகளை அறிந்திருப்பான். ஆடுகளுக்கு உணவு எப்போது தேவை, தண்ணீர் எப்போது தேவை என்பது அவனுக்குத்தான் தெரியும். புல்வெளி உள்ள இடங்களுக்கு கூட்டிச் செல்வான், நீர் நிலைகளில் விடுவான். நம் ஆண்டவர் பாலை நிலத்தில் மக்கள் பசியாக இருப்பதை அறிந்து அவர்களுக்கு அவரே (மத்.14.15) உணவு கொடுத்தார். ஆடுகள் மேயும் போது ஏதாவது அடிப்பட்டால், அல்லது முள் செடிகளில் மாட்டிக்கொண்டு வெளியே வர முடியாமல் திணறும்போது ஆடு குரல் கொடுக்கும். அதை அறிந்து மேய்ப்பன் குரல் வரும் திசை நோக்கி ஓடுவான். அதனை காப்பாற்றி வெளியே கொண்டு வருவான். ஏதாவது அடிபட்டு, காயம் இருந்தால் காடுகளில் உள்ள பச்சிலையை தேடி அதை கசக்கி சாறு எடுத்து துணியில் தோய்த்து, சிறு குச்சிகளைக் கொண்டு கட்டுப் போடுவான். ஆண்டவர் கண் பார்வை அற்றவனுக்கு கண் பார்வை கொடுத்தார், சூம்பிய கையை சுகப்படுத்தினார்.

மாலை ஆனதும் இடையன் குரல் கொடுப்பான். அவனின் குரல் கேட்டு மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுகள் அவனிடம் வந்து சேரும். அப்போது அவன் எது, எது தனது ஆடுகள் என்று பார்த்து பிரித்து கொட்டகைக்குள் அடைத்து வைப்பான். இரவு சாம காவல் புரிவான். திருடன் வந்து திருடிக் கொண்டு போகாதப்படியும், பு- போன்று காட்டு மிருகங்கள் அடித்து கொன்றுவிடாதப்படியும் தன் ஆடுகளை பாதுகாப்பான். இயேசுவுக்கு தெரியும் தன்னை தேடி வரும் உண்மையான மக்கள் யார்? பரிசேயக் கூட்டம் எது? என்று அறிவார். நம்மை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கிறார், வெளியே போகும் போதும் வரும் போதும் உன் கால்கள் இடறாதப்படி பாதுகாப்பேன் என்கிறார் இறைவன். இருள் சூழ் பள்ளத்தாக்கில் நாம் நடக்க நேர்ந்தாலும், அவர் நம்மோடு இருப்பதால் அஞ்ச வேண்டாம்.

சினை ஆடுகள் குட்டி ஈனும்போது அதன் உடன் இருந்து தடவிக் கொடுத்து உதவி புரிவான். ஆட்டுக் குட்டிகள் நடக்க இயலாத போது அதனை கைகளிலும், தோளிலும் சுமப்பான். "சுமை சுமந்து சோர்ந்து இருப்போரே என்னிடம் வாருங்கள்" என்கிறார் இயேசு. நம் சுமையை அவர் ஏற்றுக் கொள்கிறார். ஆடு மேய்த்துக் கொண்டு இருந்த தாவீதையும், மோயீசனையும், ஆமோசையும் பெயர் சொல்- அழைத்தார். நம் பெயரையும் அவர் உள்ளங்கையில் எழுதி வைத்துள்ளார். நம்மையும் அழைக்கின்றார்.

**ஆயனின் குரலுக்கு செவிமடுப்போமா?**

## செபம் கலந்த இரங்கல் செய்தி

✠ வில்லியனூர் புனித லூர்து அன்னை உயர்நிலைப்பள்ளியில் பணிபுரியும் அருட்தந்தை. S. ஜோசப் சகாயராஜ் அவர்களின் தாயார் திருமதி. S. **அற்புதமேரி** (95) அவர்கள் 08.03.2023 புதன் அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவரது நல்லடக்கத் திருப்பலியானது 09.03.2023 வியாழன் அன்று மாலை 3.30 மணிக்கு எறையூர் புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. அம்மையாரின் மகன் அருட்தந்தை S. ஜோசப் சகாயராஜ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள், அருட்தந்தை A. ஆரோக்கியராஜ் அவர்கள் மறையுரை ஆற்றினார்கள், 50 க்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் திருப்பலியில் கலந்துகொண்டு செபித்தார்கள். மேலும் பல அருட்சகோதரிகளும் மற்றும் இறைமக்களும் திருப்பலியில் கலந்துகொண்டு அம்மையாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தார்கள். தாயை இழந்து துன்புறும் அருட்தந்தைக்கும் மற்றும் அவரது உடன்பிறப்புகளுக்கும் ஆழ்ந்த செபம் கலந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே!

❄ ❄ ❄ ❄ ❄ ❄ ❄

✠ எம்மாவுஸ் ஓய்வு இல்லத்தில் இருக்கின்ற அருட்தந்தை. S. மரிய ஜோசப் அவர்களின் இளைய சகோதரர் திரு. S. **மரிய குழந்தை** (59) அவர்கள் 11.03.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவருடைய நல்லடக்கத் திருப்பலியானது 13.03.2023 திங்கள் அன்று நெய்வேலி புனித காணிக்கை அன்னை ஆலயத்தில் மாலை 3.30 மணிக்கு நடைபெற்றது. அருட்தந்தை C.ஜோசப் அருமைசெல்வம் தலைமையேற்று திருப்பலி நிறைவேற்றினார். 30 குருக்கள் கலந்துகொண்டு செபித்தனர். அருட்தந்தை P.ரொசாரியோ மறையுரை ஆற்றினார். இறுதியில் அருட்தந்தை. S. மரிய ஜோசப் அவர்கள் மந்திரித்த பின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. சகோதரரின் பிரிவால் வாடும் அருட்தந்தைக்கும் மற்றும் குடும்பத்தாருக்கும் இரங்கலையும், செபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். இரக்கமிகு இறைவன் நித்திய இளைப்பாற்றியை அருள்வாராக.

\- ஆசிரியர்.


## மிஷன் அச்சக வெளியீடு

### புனித சூசையப்பர் வணக்கமாதம்




மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001.

# கல்மனம் கரைந்தது

212



– திரு B. *மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*

**நற்செய்தி:** தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16).

**மதப் பிரச்சாரகர் பில் க்ளாஸ்:** Bell Glass என்பவர் சிறந்த முன்னாள் கால் பந்தாட்ட வீரர். பின்னாளில் சிறந்த நற்செய்தி பிரச்சாரகராக போற்றப்பட்டார். அவர் மனமாற்றச் செய–ல், அதிலும் குறிப்பாக சிறைச்சாலைகளில் அவநம்பிக்கையுடனும், வெறுப்பிலும் வாழும் கைதிகள் மத்தியில் தன் பணியை மிகச் சிறப்பாக செய்து வந்தார். ஒருவருக்குள் இயேசு கிறிஸ்து எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவார் என்பதை நம்பிக்கையுடன் போதித்து வந்தார். இவருடைய இத்தகைய கிறிஸ்துவ பிரச்சார செயலால் மனமாற்றம் பெற்றவர்களின் பட்டியலுக்கு முடிவே இல்லை. பில்க்ளாஸ் செய்த மனமாற்றச் செய–ல் அரியச் செயல் ஒன்று உண்டு.

**சிறைச்சாலையில் மனமாற்றம்:** இடது கை பழக்கமுடைய ஒரு பயங்கர கொலைக்காரன் தனிமை சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். அவனை எல்லோரும் ''இடக்கை நாய்'' என்ற பட்டப் பெயராலேயே அழைத்தனர். அனைவரையும் நடுங்கவைத்த அந்த கொலைக்காரக் கைதியின் மனமாற்றம் அற்புதமானது. சகக் கைதிகள் அவனுடைய அந்த பட்டப்பெயரால் அழைத்தபோதெல்லாம் அவன் வெகுண்டேழுவான். அவன் நாயைவிடக் கேவலமானவன், ஒதுக்கப்பட்டான், விரும்பத்தகாத ஒரு மிருகம்.

பில் க்ளாஸ் அவனை அணுகி உன்னுடைய உண்மையான பெயர் என்ன? என்று கேட்டார். அந்த கைதியிடமிருந்து உறுமலுடன் பதில் வந்தது: ''இடக்கை நாய்'' இதற்கெல்லாம் அஞ்சாத அந்த போதகர் அவ்விடம் விட்டு அகலவில்லை.. அவனோ ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விரோத மனப்பான்மையுடன் சபித்துக் கொண்டும் வசைப்பாடிச் கொண்டும் இருந்தான். அவன் நற்செய்தியை தவறாகப் புரிந்து கொண்டவனாகத் தோன்றியது. எனவே நற்செய்தி பற்றிய அவனுடைய தவறான புரிதலை சரி செய்யும் பொருட்டு அவர் கூறியது: நற்செய்தி வசனங்கள் புண்ணியவான்களுக்காக எழுதப்பட்டது அல்ல, பாவிகளுக்காகவே. இயேசு கிறிஸ்து பாவிகளை மீட்கவே இம்மண்ணகம் வந்தார். யோவான் நற்செய்தியை படி, உனக்கு புரியும். அவனிடம் ஒரு நற்செய்தி புத்தகத்தை கொடுத்துவிட்டு அவ்விடம் விட்டு அகன்றார்.

**கல்லும் கரைந்தது:** அந்த போதகர் கொடுத்த நற்செய்தி புத்தகத்தை வேண்டா வெறுப்புடன் வாசிக்கத் தொடங்கினான். நற்செய்தி வசனங்கள் மனதை தொடுவதை உணர்ந்தான். அதை மீண்டும் மீண்டும் வாசித்தான். நற்செய்தி வசனங்கள் இடக்கை நாயின் மனதை உருக வைத்தது. கிறிஸ்துவுக்காக நல்லதொரு தீர்மானம் எடுக்க வைத்தது.

அடுத்தநாள் பில் க்ளாஸ் சென்றபோது அவன் முற்றிலும் மாறிய மனிதனாகக் காணப்பட்டான். அவனுடைய கல்மனம் கரைந்து அவனுள் இயேசு கிறிஸ்து காணப்பட்டார். இப்போது தானாகவே முன் வந்து, ''இடக்கை நாய்'' செத்துவிட்டான். என் இயற்பெயர் ஜார்ஜ் என்றான்.

ஆண்டவரை ஒருவன் ஏற்றுக்கொள்ளும்போது ஏற்படுகின்ற மாற்றம் அதி அற்புதமானது. இயேசு கிறிஸ்து அவனை ஒரு புதிய வார்ப்பாக மட்டுமல்ல, அவனுக்கென்று ஒரு தனிச் சாயல், ஒரு புதிய ஆன்மா, ஒரு புதிய பெயர் கொடுக்கிறார். அளவிட முடியாத கருணைக் கடலாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து போற்றப்படுவாராக.

# அவர்களைப் போல்



- அருள்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM

பாம்பு பெண்ணிடம், **"நீங்கள் சாகவே மாட்டீர்கள்; ஏனெனில், நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் "கடவுளைப் போல்" நன்மை, தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்"** என்றது. (தொ.நூல் 3:4-5).

"**பாவம்** தோன்றியதும் **மரத்தில்தான்;**
**பாவம்** அழிந்ததும் **மரத்தில்தான்."**

கடவுள் எந்த மரத்தில் எதைச் செய்யக்கூடாது என்று ஆதாம் ஏவாளுக்குப் பணித்தாரோ, அந்த மரத்தில் அதே கனியை உண்ணும்படி தூண்டினான் **சாத்தான்**.

இப்படி,

"**நன்மை தீமை அறியும் மரத்தில்** தோன்றிய பாவம்,
**இயேசுவால் சிலுவை மரத்தில்** அழிக்கப்பட்டது."

**"கடவுளைப் போல்"** என்பது பாவம் உருவாக சாத்தான் பயன்படுத்திய சூழ்ச்சிமிகு வார்த்தை ஆகும். இந்த வார்த்தையால்,

சாத்தானின் சூழ்ச்சிக்கு அடிமை**யாகி "கனியை உண்டு" ஏமாந்தனர்** ஆதிப் பெற்றோர்.

சாத்தானின் சூழ்ச்சிக்கு அடிமை**யாகாது "அகன்று போ சாத்தானே"** என்று **தீமையை வென்றார் இயேசு.**

இன்றும்,

**"அவர்களைப் போல்"**

என்ற சாத்தானின் சூழ்ச்சிமிகு வார்த்தைக்கு **அடிமையாகிக்** கொண்டேதான் இருக்கின்றார்கள் மனிதர்கள். எப்படியெனில்,

❖ நீயும் குறுக்கு வழியில் செல். **"அவர்களைப் போல்"** வெற்றி பெறலாம்.

❖ **"அவர்களைப் போல்"** உனக்கும் கிடைக்க வேண்டும் என்று நினை. பிறருக்கு கிடைத்தால் என்ன? கிடைக்காவிட்டால் என்ன?

❖ தீமை செய்வதில் அவர்களுக்கு உடந்தையாக இரு. **"அவர்களுக்கு வழங்கியதுபோல்"** உனக்கும் வழங்குவார்கள்.

❖ **"அவர்களைப் போல்"** உனக்கும் செல்வம் சேர வழி தேடு. பிறர் வறுமையில் இருந்தால் உனக்கென்ன?

❖ **"அவர்களைப் போல்"** நீயும் பாராட்டுதல் பெற விரும்பு. அதற்காக பிறரைப் பகைத்துக் கொண்டால்தான் என்ன?

❖ **"அவர்களோடு சேர்ந்து"** பிறரை விமர்சித்துப்பார். உன்னையும் உலகம் திரும்பிப் பார்க்கும்.

**ஆனால் தனித்துவத்தோடு வாழ்ந்தவர்களும் உண்டு!**

➢ **அன்னை மரியா** அவருக்கே உரிய **அரிய குணங்களைக் கொண்டு** வாழ்ந்ததால் உலகிற்கே தாயானார்.

➢ **திருமுழுக்கு யோவான்** நன்மைகளைப் பாராட்டியும், தீமைகளை இடித்துரைத்தும் அவருக்கே உரிய **துணிந்த மனதோடு** வாழ்ந்ததால் இயேசுவின் முன்னோடியாக போற்றப்படுகிறார்.

➢ **வெரோணிக்கா வீரத்தோடு** இயேசுவின் திருமுகத்தைத் துடைத்ததால் இன்று வீரப் பெண்ணாக பாராட்டப்படுகிறார்.



## 27 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

**அருட்பணி பியர் கையே** MEP

ME தமிழாக்கம் **Dr.Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

நான் மீண்டும் சொல்கிறேன் இவ்வளவு முன்னேற்பாடுகள் இருந்தும் திரு அவை சில சமையங்களில் ஏமாற்றம் அடைகிறது. நிச்சயமாக அது அதனுடைய தவறு அல்ல.

இத்தகைய வாக்குறுதிகளைத்தான் நாமும் எடுத்துள்ளோம். இப்படிப்பட்ட உடன்பாட்டை எடுத்துள்ளோம். இந்த உடன்படிக்கையை நாமே முன் வந்து அதன் கனாகனத்தை அறிந்து ஏற்றுக்கொண்டோம்.

நாம் குருமடத்தில் இருந்தபோது குருத்துவத்தின் தனிச்சலுகை பற்றி அடிக்கடி நமக்குக் கூறப்பட்டது. குருத்துவ நிலையின் மகத்துவம், அழகு, மேன்மை, உன்னதம் எல்லாம் நமக்குக் காட்டப்பட்டது.

ஆனால் அடிக்கடி பயங்கரமான நமது பொறுப்புப் பற்றி கூறப்பட்டது. நமக்கு வரவிருக்கும் துன்பங்கள், வருத்தங்கள், சோதனைகள், ஆபத்துகள் மீதும் நமது கவனம் ஈர்க்கப்பட்டது. குருக்களாகிய நாம் புனிதர்களாக, உண்மையான புனிதர்களாக, மறு கிறிஸ்துவாக சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்னும் கடமை மிகக் கண்டிப்பாகத் தொடர்ந்து நினைவூட்டப்பட்டது.

அந்த கருத்து பற்றி எண்ணற்ற உரைகள் நிகழ்த்தப்பட்டன. அதே கருத்து பற்றி பல நூல்களைப் படித்துள்ளோம். பல ஆண்டுகளாக அது பற்றி தியானித்துள்ளோம்... "நீங்கள் சுதந்திரமாக உள்ளீரகள். எதுவும் எவரும் உங்களைக் குருவாகும்படி வற்புறுத்தவில்லை. நீங்கள் விரும்பினால் உலகுக்குத் திரும்பிவிடலாம். பொதுநிலையினர் வாழ்வைத் தேர்ந்துகொள்ள உங்களுக்குச் சுதந்திரம் உண்டு. ஆனால் நீங்கள் நிலைத்திருந்தால் குருவாக விரும்பினால் நீங்கள் புனிதராக வேண்டும். புனிதர்களை மட்டுமே திரு அவை விரும்புகிறது. உங்களுக்கு விருப்பமில்லை என்றால் புனிதராக உங்களால் முடியாது என்றால் உண்மையான புனிதராக உங்களால் முடியவில்லை என்றால் எரியும் முட்செடியை நெருங்க வேண்டாம். உங்களுடைய பலவீனமான தோள்கள் மீது உங்களால் சுமக்க முடியாத சுமையை ஏற்க வேண்டாம். இப்படிப்பட்ட வார்த்தைகள் இடைவிடாது நம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. எனவே நமது குருப்பட்ட தினத்தன்று நம் பெயர் சொல்லி அழைக்கப்பட்டபோது "இதோ நான் வருகிறேன்" என்று பதிலளித்தோம். நமக்குக் குருப்பட்டம் அளித்த ஆயரின் கைகளின் முன் நம் தலையைத் தாழ்த்தியபோது எல்லோருக்கும் கேட்கும்படி உரக்கச் சொன்னோம்: "நான் வாக்களிக்கிறேன்" நாம் என்ன செய்கிறோம் என்று நன்கு அறிந்திருந்தோம். நாம் குழந்தைகள் அல்ல. நாம் மனிதர்கள். பக்குவ வயது அடைந்தவர்கள், இருபதைக் கடந்து முப்பதை எட்டியவர்கள். நமது முழுமையான அறிவைக் கொண்டவர்கள்.



நமது சுதந்திரத்தை நமது அழைத்தலின் பலி பீடத்தின் மீது தியாகம் செய்தவர்கள். புனிதர்களாக வாழ உறுதிமொழி எடுத்தவர்கள்.

இப்போது திரு அவை நம்மைத் தன் பணியாளர்களாகவும் தன் பிரதிநிதிகளாகவும் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது. நமது வாக்குறுதியின் சக்தியின் மீதும் நம்பிக்கை வைத்து ஏற்றுக்கொண்டது. இன்னும் நமது விருப்பம் போல நடக்கலாமா? உண்மையாகவே புனிதராகும் முயற்சிகளை எல்லாம் துறவற சந்நியாசிகளுக்கும் கன்னியர்களுக்கும் விட்டுவிட்டு சாதாரண புண்ணியங்களோடு திருப்தி அடையலாமா? காரியங்களைச் சுலபமானதாக எடுத்துக்கொள்ளலாமா? நம்முடைய சுய நாட்டங்களில் மூழ்கி நம் சொந்த ஆதாயங்களைத் தேடலாமா?

நம் உடன் குருக்களுக்கு இடறலாக இருக்க நமக்குச் சுதந்திரம் உண்டா? கடவுள் மந்தையின் ஆடுகளுக்கு கெட்ட மாதிரிகளாக நடந்து நம் அன்னை திரு அவைக்கு அவமரியாதை வருவிக்கலாமா?

இப்படிப்பட்ட நடத்தை நமக்குப் பாவத்தைவிடப் பெரிது. அது துரோகமாகும். அது பிரமாணிக்கம் அற்றதும் ஆகும். குருத்துவத்தோடு இணைந்த ஆதாயங்களை அனுபவித்துக் கொண்டு குருவாக இருக்கத் தகுதியான தீவிர முயற்சிகளை எடுக்காமல் இருப்பது கூக்குரலிடும் அநீதியாகும்.

### அதிகாரம்-5 நம் சகோதரர்களின் ஆன்மாக்கள்

குரு எவ்வாறு தன் குருப்பட்ட தினத்தன்று கடவுளோடும் திரு அவையோடும் பயபக்தியான தன் அர்ப்பணத்தால் தன் உடன் படிக்கையை உறுதி செய்தார் என்று பார்த்தோம். தான் புனிதராக இருக்க அது அவசியமாகிறது.

இப்போது மேலே ஒரு படி சென்று மக்களின் ஆன்மாக்களோடு அவர்கள் கொண்டுள்ள உறவில் அதே கோரிக்கை சிறிதும் குறைவின்றி எதிர்பார்க்கப்படுகிறது.

**● புனித கிறிஸ்டோபர் வாழ்வில் இதை வாசிக்கிறோம். அவருக்குக் கொடுக்கப்பட்ட பணியின் பொருட்டு ஒரு நாள் அவர் ஆபத்தான ஓர் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. அன்று ஒரு சிறுவன் அவருடைய குடிசையின் கதவைத் தட்டினான். தன்னை ஆற்றின் மறு கரைக்குத் தூக்கிச் செல்லுமாறு கேட்டான். நெடிய உருவம் உடைய அவர் உடனே அவனைத் தன் தோளில் சுமந்துகொண்டு தண்ணீரில் சுலபமக நடக்க ஆரம்பித்தார். அவருக்கு அது ஓர் இறகைச் சுமந்து செல்வது போல இருந்தது. ஆனால் சிறிது சிறிதாக அந்தக் குழந்தை பாரமானது. அவரைச் நசுக்கும் அளவுக்கு அவன் பளுவானான். அவரால் மேலும் நடக்க முடியவில்லை. அப்போது குழந்தையை நோக்கி அவர் சொன்னார்: "என்ன உலகத்தைப் போல நீ பாரமாக இருக்கிறாயே" "ஆச்சரியப்படாதே" குழந்தை இயேசு சொன்னார்: "நீ உலகத்தைவிட மேலானதைத்தான் சுமந்து செல்கிறாய். நீ உலகைப் படைத்தவரைச் சுமந்து செல்கிறாய்." என்றது.**

தொடரும்

# ஏழையின் சிரிப்பில் இறைவன்



- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.

சமயபுரத்து மன்னனுக்கு அதிக படிப்பறிவு கிடையாது. ஆனால் வீராதி வீரனாகத் திகழ்ந்தான். அரசனுக்குப் புலவர்ளைக் கண்டால் மிகவும் பிடிக்கும். புலவர்கள் அரசனைப் புகழ்ந்து பாடி நின்றால் அவர்களது ஊரைக் கேட்டு அதற்கும் அரண்மனைக்கும் எத்தனை மைல் தூரம் இருக்கின்றதோ அதைக் கணக்கிட்டு அதற்கேற்றவாறு பொற்காசுகளை கொடுத்தனுப்புவதே அவனது வழக்கம்.

ஒருமுறை புலவர் ஒருவர் வந்து அரசனைப் புகழ்ந்து பாடினார். அரசனும் அவரது பாடலுக்குப் பாராட்டுத் தெரிவித்து வழக்கம் போல, "புலவரே நீங்கள் எந்த ஊரிலிருந்து வந்திருக்கின்றீர்?" என்று கேட்டான். புலவரோ தான் மதுரையிலிருந்து வந்திருப்பதாகக் கூறினார்.

"இங்கிருந்து மதுரை எவ்வளவு தூரம்?" என்று மந்திரியிடம் கேட்டான் அரசன். அவரோ "முன்னூறு மைல்கள் தொலைவு இருக்கலாம்" என்றார். அரசன் உடனே புலவருக்கு 300 பொற்காசுகளை வழங்கி அனுப்பி வைத்தான்.

இதைக் கேள்விப்பட்ட பண ஆசை பிடித்த உள்ளூர் புலவன் ஒருவன் வந்து அரசனைப் புகழ்ந்து பாடினான். அரசனும் அவனைப் பார்த்து "நீ எங்கிருந்து வருகின்றாய்?" என்றான். பேராசைப் புலவன் அதிகம் தூரம் சொல்லி அதிகப் பணம் வாங்கிக் கொள்ளலாம் என்ற பேராசையால் உந்தப்பட்டு உடனே தான் வைகுண்டத்திலிருந்து வந்திருப்பதாகக் கூறினான்.

அதைக் கேட்ட அரசன், "மந்திரியே வைகுண்டம் எங்கிருக்கின்றது?" என்று கேட்டான். "அரசரே வைகுண்டம் என்பது இறைவன் வாழும் ஊர். நாம் கூப்பிட்டால் இறைவன் உடனே வந்து விடுவான். ஆகவே வைகுண்டம் கூப்பிடும் தூரத்தில்தான் உள்ளது" என்றான் மந்திரி.

"அப்படியானால் ஒருமைல் தூரத்தில்தான் அந்த ஊர் இருக்கும். ஆகவே புலவருக்கு ஒரு பொற்காசு மட்டும் கொடுத்து அனுப்புங்கள்" என்றான் படிப்பறிவில்லாத அரசன்.

உலகில் பண ஆசை இல்லாத மனிதர்களே இல்லை. உண்மையாய் பாடும் புலவருக்கும் பணத்துக்காகப் பாடும் புலவருக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். பணத்தின் மேல் வைக்கும் ஆசைக்கு எப்படியெல்லாம் ஏமாற்ற வேண்டியிருக்கின்றது பார்த்தீர்களா!

ஆசைகள் அதிகம் ஏற்படும்போது முதலில் நிற்பது பண ஆசைதான். **பண ஆசைதான் எல்லாத் தீமைகளுக்கும் வேர். அந்த ஆசையால்தான் சிலர் தங்களையே ஊடுருவக் குத்திக் கொள்வதுபோல் பல துன்பங்களைத் தங்கள் மேல் வருவித்துக் கொண்டார்கள் (1திமோ 6:10)**

இறைமகன் இயேசுவையே காட்டிக் கொடுத்த யூதாசை ஆட்டிப் படைத்தது 30 வெள்ளிக் காசின் மேல் கொண்ட பணத்தாசைதான்

தவக்காலத்தில் பயணிக்கும் நாம் மனதில் ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்வோம். பணத்தைச் சிறுகச் சிறுகச் சேமித்து இல்லாதவர்களுக்குக் கொடுத்து அந்த ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.

# நான்காவது ஞானியின் கதை



திரு. ஜெயராஜ் டானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

12 தொடர்ச்சி

"ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் கடவுள் இரக்கம் நிறைந்தவரான உம் பயணத்தை ஆசீர்வதித்து வெற்றிபெறச் செய்வார். மேலும் நீர்போக விரும்பும் இடத்திற்கு இடரின்றி கொண்டு சேர்ப்பார். மெசியாவைக் காண வழிகாட்டுவதைத் தவிர என்னால் உங்களுக்கு வேறெந்த கைம்மாறும் செய்ய முடியாது. அவர் எருசலேமில் அல்ல, யூதா நகரிலுள்ள பெத்லகேமில் பிறக்க வேண்டும் என்று தீர்க்கதரிசிகள் சொல்லியிருக்கிறார்கள். சாகக்கிடந்தவன் மீது பரிவு காட்டிய உங்களை ஆண்டவர் அந்த இடத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்வார்."

நள்ளிரவு தாண்டி வெகுநேரமாகியிருந்தது. அர்தபன் துரிதமாக சவாரி செய்தார். சிறிது ஓய்விற்குப்பிறகு புத்துணர்ச்சி அடைந்த வஸ்தா, கால்வாய்களை நீந்திக் கடந்தாள். எஞ்சியிருந்த வலிமையை ஒன்று திரட்டி அமைதியான சமவெளி வழியாக ஆர்வத்துடன் ஒரு விண்மீன் போல ஓடினாள்.

ஆனால், பயணத்தின் இறுதிக்கட்டத்திற்குள் நுழையும் போது விடிந்து விட்டது. அர்தபனின் கண்கள் நிம்ரோட் குன்றையும் ஏழு கோளங்களின் கோவிலையும் ஆர்வத்துடன் நோட்டமிட்டன. ஆனால், அவருடைய நண்பர்கள் இருப்பதற்கான அடையாளம் எதுவும் தென்படவில்லை.

இயற்கையின் சீற்றத்தால் சிதறுண்டு, மனிதரின் வன்முறையால் சிதைக்கப்பட்ட கறுப்பு, ஆரஞ்சு, சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், வெள்ளை என பல வண்ணங்கொண்ட மேல்தளங்கள், காலைக்கதிரொளியில் பாழடைந்த வானவில் போல மின்னிக்கொண்டிருக்கின்றன.

அர்தபன் மலையைச் சுற்றி வேகமாகச் சென்றார். பிறகு, இறங்கி மேற்கு முகமாக உயர்ந்திருந்த மேல்தளத்தை நோக்கி ஏறினார்.

சதுப்பு நிலங்களின் பாழ்பரப்பு பாலைவனத்தின் எல்லை வரை நீண்டிருந்தது. சதுப்புப் பறவைகள் தேங்கிய குட்டைகளில் நின்று கொண்டிருந்தன. நரிகள் புதர்கள் வழியே பதுங்கிச் சென்றன. ஆனால், தூரத்திலோ அருகிலோ ஞானிகள் தங்கி இருந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை.

உடைந்த செங்கற்களால் ஆன மேல்தளத்தின் விளிம்பில் ஒரு சிறிய கல்லையும் அதன் கீழே ஒரு காகிதத்தையும் கண்டு,அதை எடுத்து படித்தார்: "நள்ளிரவைத் தாண்டி காத்திருந்தோம். இனியும் தாமதிக்க முடியாது. ராஜாவைக் காணசெல்கிறோம். பாலைவனத்தைக் கடந்து பின்தொடரவும்." அர்தபன் தரையில் அமர்ந்து விரக்தியுடன் தலையைப்பிடித்துக்கொண்டார்.

"சோர்வடைந்த குதிரையுடன் உண்ண உணவின்றி பாலைவனத்தை எப்படி கடக்க முடியும்? பாபிலோனுக்கு திரும்பி செல்வதைத் தவிர வேறு வழியில்லை. கையிலிருக்கும் நீலமணியை விற்று, ஒட்டகங்களையும் பயணத்திற்கு தேவையான பொருட்களையும் வாங்க வேண்டும். நண்பர்களைக் கண்டடைவது சிரமம். ஒருவருக்கு உதவியதால் நேர்ந்த தாமதத்தால் மன்னரைக் காணும் பாக்கியத்தை இழந்து விட்டேனா என்பது கருணைக்கடலான கடவுளுக்குத் தான் வெளிச்சம்" என்று புலம்பினார்.

-தொடரும்

## விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

தோற்றம் : 13-10-1910
மறைவு : 22-03-1994



**ROLLIN Paranjodi**

தோற்றம் : 24-07-1921
மறைவு : 11-05-2009



**ROLLIN Sagoundala**

அன்பின் ஆண்டவரே! இரக்கமே உருவான இயேசுவே! மண்ணக வாழ்வில் மறைந்தாலும், எங்கள் மனதில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்பு பெற்றோர் **ரொலேன் பரஞ்ஜோதி - ரொலேன் சகுந்தலா** இவர்கள் இப்பூவுலகைவிட்டு உம் திருவடி சேர்ந்த நாளை நினைவு கூர்கின்றோம். அவர்களின் ஆன்மா நித்திய வான் வீட்டில் முடிவில்லா பேரின்பத்தை பெற்றருள வேண்டுகிறோம்.

22-03-2023 புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு, புதுச்சேரி புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மகள்கள், மகன்கள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

## 2-ஆம் ஆண்டு நினைவு

மலர்ந்தது: 16-10-1948



உதிர்ந்தது: 21-03-2021

திருமதி. **லூர்துமேரி** ஆசிரியை ஓய்வு

ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய் - எசா 62:3

**திருப்பலி** இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-03-2023 திங்கள் காலை 6.15 மணிக்கு தாகூர் நகர், தூய ஆவியார் ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலிகள் நிறைவேற்றப் படும். இதை கண்ணுறும் அனைவரும் இவருக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

கணவர்: ஜோசப்
மகன்: ஹெல்த் ராஜ் சீரன் - ரஞ்சனி
மகள்: இமா ஷாஜி - இரட்சகர்
மகள்: லில்லி - சார்லஸ்
மற்றும் பேரப்பிள்ளைகள்-லாஸ்பேட்,புதுவை.8

## விண்ணக வாழ்வின் 39-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது: 17-03-1915



உதிர்ந்தது: 19-03-1984

**JOSEPH EMMANUEL LAPORTE**
**(S/o. Mr. Simon LAPORTE), (Sergent chef, Etat-Major)**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவா 11:25

**திருப்பலி** 19-03-2023 **ஞாயிறு** மாலை 5.15 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்கவும்.

**பிரிவால் துயருறும்**

மகள்: ஷீலா விக்டர்
பேரன், பேத்திகள்,
கொள்ளுப்பேரன்கள்,
கொள்ளுப்பேத்திகள்.

## வத்திக்கான் செய்திகள்

**10 மார்ச் 2023 :** "திருஅவை சிலருக்கு மட்டுமான வீடல்ல மாறாக தேர்ந்தெடுக்கப்பட்ட கடவுளின் உண்மையுள்ள மக்கள் அனைவருக்குமான வீடு" என்று இத்தாலிய சுவிஸ் வானொலி மற்றும் தொலைக் காட்சிக்கு தனது பத்து ஆண்டுகால தலைமைத்துவ பணி நிறைவிற்காக கொடுத்த நேர்காணலில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்கள்.

**10 மார்ச் 2023 :** இத்தாலிய மறைப்பணியாளரான வீரமாமுனிவரால் கட்டப்பட்ட தமிழ்நாட்டின் கோணாங் குப்பத்தில் அமைந்துள்ள பெரியநாயகி அன்னை திருத்தலத்தில், பாண்டிச்சேரி தூய இதய மரியன்னை சபை அருட்சகோதரிகள் நடத்தும் "மார்னிங் ஸ்டார்" பேச்சு மற்றும் செவித்திறன் குறையுள்ள சிறார்க்கான பள்ளி இயங்கி வருகிறது. "மாண்பும், பொருளாதாரத்தோடு கூடிய தன்னம்பிக்கையும் கொண்டு பெண்கள், பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள சிறார் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மிகச்சிறப்பான பணியினைப் ஆற்றுகின்றார்கள்" என்று கூறியுள்ளார் அத்திருத்தல அருள் பணியாளர் அருட்திரு தேவசகாயராஜ். (Asia News)

30-ஆம் ஆண்டு நினைவு 16-ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்: 01-02-1920
மறைவு : 26-03-1993



தோற்றம் : 01-11-1926
மறைவு : 20-03-2007

திரு. **D. இரபேல்நாதன்** திருமதி. **R. சகாயமரி**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" -யோவா 11:25

இறந்த எங்கள் பெற்றோருக்கு கோவிலானூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் 20-3-2023 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவர்களுக்காக இறைவனிடம் மன்றாட உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

மகள்:திரு. **R.D.**எலிசபெத்
மருமகன்: **A.** சக்கரியாஸ்
பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்ப உறவினர்கள். கோவிலானூர்.

மகன்கள்:திரு. **R.** பால் பிரான்சிஸ்
அருள்பணி. **R.** ஜோசப்ராஜ்
செயலர், புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட கல்விக் குழுமம்.

---

## விண்ணக வாழ்வின்
## 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :25-05-1934



மறைவு : 23-03-2014

**திரு. A.L. ஜான்**
Rtd. District Registrar

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." -யோவா 11:25

23-03-2023 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மகள்கள், மருமகன்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்.

---

## விண்ணக வாழ்வின் 16-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நினைவு அஞ்சலி

பிறப்பு : 03-12-1934
இறப்பு: 25-03-2007



பிறப்பு : 05-12-1943
இறப்பு: 13-09-2018

**திரு.S.அந்தோனிராஜ்,** **திருமதி.A.பெர்னெதெத் அம்மாள்**
தலைமை ஆசிரியர் (ஓய்வு) M.A.M.Ed,B.G.L.

"அவர்கள் அமைதிக்குள் சென்றடைகின்றனர். நேர்மையான வழிமுறையைப் பின்பற்றுவோர் தம் இறுதிப் படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர்" (எசா 57:2)

திரு. S.அந்தோனிராஜ் தலைமை ஆசிரியர், இவரது மனைவி திருமதி A.பெர்னெதெத் அம்மாள் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 25-03-2023 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மதுராந்தகம், புனித அந்தோணியார் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள் மற்றும் பேரக்குழந்தைகள்.**

மதுராந்தகம்.

---

## 20-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு :03-05-1941



இறப்பு: 29-03-2003

**திரு.N. தேவதாஸ்,**Tr., B.Lit.,B.Ed.,

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" - திபா 27:4)

எம் குடும்பத்தின் கலங்கரை விளக்கே! நாங்கள் கரை சேர்ந்தோம் - ஆனால் நீர் இறைவனில் கரைந்து போனீரோ! ஆண்டுகள் பதினெட்டு ஆனாலும் நீர் விட்டுச் சென்ற வெற்றிடத்தை எம் கண்ணீரால் நிரப்புகின்றோம். இரக்கத்தின் இறைமகனே! ஏழைக்காய் இரங்கி எம் அடியாருக்கு இன்ப சாந்தி அளித்தருளும்.

நினைவேந்தல் திருப்பலி: 26-03-2023 ஞாயிறு அன்று நெல்லிக்குப்பம், புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி: **P.** எஸ்தர்மேரி
மகள்கள், மருமகன்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.

# விண்ணக வாழ்வின்
# ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஆண்டவரின் இல்லத்தில் வாழ்நாளெல்லாம் நான் குடியிருக்க வேண்டும். திரு.பா.27:4



லமாத் (ஏ)

## திரு.I.சின்னப்பன்

ஆசிரியர் (ஓய்வு) & பள்ளி நிர்வாகி

நன்மையான கொடைக்காக மண்ணில்

**01-06-1933**

நிறைவான வரம்பெற விண்ணில்

**26-03-2017**

ஆலமரமாய் நிழல் தந்தீர் அடிபட்ட மரமாய் சாய்ந்தீர்
நாளும்யெமைக் காத்த உம்மை காணும் விழிகளிலோ கண்ணீர்
சட்டென்று விண்ணகம் சென்றதால் வழியின்றி தவித்தோம் யாம்
விட்டு விட்டு சென்றாய் விண்ணிற்கு விழுதுகள் சுவடுகளாம் மண்ணிற்கு

உம்மால் வளர்ந்தவர் ஆயிரமாயிரம் உம்மை விரும்பியவர் பல்லாயிரம்
பாசமுள்ள தந்தையே நினைத்திடுவீர் நாளும் எம்மை!
விலகிச் சென்றிட எண்ணம் ஏன் வந்தது விளக்கி சொல்வார் யாருமில்லை
இனிதான பாசமான உம் அருள்திரு முகத்தை இனி எப்போது காண்போம்.

உதிராத மலரில்லை உலராத மண் இல்லை
புரியாத வாழ்க்கையில் புதையாத பொருளில்லை!
உடையாத சங்கில்லை ஒடுங்காத மூச்சில்லை
இயற்கை நியதிகளில் இறப்பும் ஒரு நிகழ்வுதானே

தினம்தினம் தந்தையே உம் ஞாபக அலைகள்!
எட்டி எட்டி பார்க்கும் எம் கண்ணீர் துளிகள்
நம்பத்தான் முடியவில்லை எம் மனதால்
நாங்களும் நீங்களும் பிரிந்திருப்பதை

காலச் சக்கரம் கடுகி விரைந்தாலும்
கணமும் உம்மை மறக்க முடியாமல்
ஏங்கித் தவிக்கும் பாசமலர்களாய்
உமக்காய் இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்
நீவிர் என்றும் இறைவனில் இளைப்பாற.

எங்கள் தந்தை தெய்வத்திரு.லமாத் (ஏ) I.சின்னப்பன் அன்னாரது ஆன்மா இளைப்பாற்றிற்காக 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு வேலந்தாங்கல் புனித விண்ணரசி அன்னை ஆலயத்தில் நினைவு நாள் கூட்டுத் திருப்பலியில்

*கூடிஜெபிக்க அன்புடன் அழைக்கின்றோம் ...*

**"ஆண்டவரின் கைகளில் நீ அழகிய மணிமுடியாய் திகழ்வாய்"** ஏசா.62:3

பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்

## Rev.Fr.Dr. C.சகாயராஜா

M.A.,M.A.,M.A., B.Ed., M.Phil., Phd.
முதல்வர் புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி-எறையூர்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் நண்பர்கள்
**வேலந்தாங்கல்.**

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே. முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.



# தீரத் தியாகி

**(புனித தேவசகாயம் வரலாறு)**



- Dr. **தீபக் தாமஸ்,**
பல் மருத்துவர், புதுவை.

"ஆம் அதிகாரியே!
அரசருக்கு பல மாதங்களாய்
தூக்கம் வரவில்லை
நிம்மதியின்றி தவித்தார்.
எதிரிகள் வைத்த பில்–சூன்யம்
என எண்ணி அஞ்சியவர்
தளபதி டிலனாயிடம் அதைக்கூற
சிலுவை பொறித்த கட்டிலொன்றை
மன்னருக்கு அளித்தார் தளபதி.
அதில் படுத்த பின்னரே
அமைதியாய் உறங்கி வருகிறார் அரசர்.
சிலுவை பொறித்த கட்டி–ல் படுப்பவர்
ஏசுவை ஏற்றுக் கொண்டதாகத்தானே அர்த்தம்.
உங்களுக்கேனும் ஐயமிருந்தால்
நீர் போய் கட்டிலை பார்க்கலாம்"
என பணிவுடன் உரைத்தார் பிள்ளை.

"ஏய் முட்டாளே
என்ன பேசுகிறாய்?
அரசராவது
சிலுவை பொறித்த கட்டி–ல்
உறங்குவதாவது.
நான் வேறு
அதைப் போய்
காண வேண்டுமா?
மூடனே
உனக்கு
தக்க பாடம் புகட்டுகிறேன்."



"காவலாளிகளே
இங்கே வாருங்கள்
இவனை ஒரு மாதம்
நம் வட்டாட்சிக்குட்பட்ட
அனைத்து கிராமங்களிலும்
எருமை ஊர்வலம்
அழைத்துச் செல்லுங்கள்.

உள்ளங்கா–ல்
நன்றாய் உறைக்குமாறு
தினமும் முப்பது அடி கொடுங்கள்
புத்தி தெளிகிறதா பார்ப்போம்"
என உத்தரவிட்டார் அதிகாரி.

உள்ளங்கா–ல் பட்ட அடிகள்
உச்சந்தலை வரை ஏறினாலும்
"இயேசுவே இயேசுவே" என்றபடியே
இன்முகத்துடன் அவற்றை ஏற்றார் பிள்ளை.

தொடரும்.



## வாழ்த்துகிறோம்

அருட்சகோதரி –ல்– மரி ME சபையின் முன்னாள் சபைத் தலைவி, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சர்வவியாபியில் தொடர்ந்து ஆன்மிகம், நற்செய்தியின் விழுமியங்கள், தலைமைப்பண்பு பற்றி எழுதி வருகிறார்கள். அவர்களுடைய எழுத்துப் பணியைப் பாராட்டிப் **லீ- கிளமெண்ட் பொதுநல சமூகசேவை அறக்கட்டளை** புதுவை தமிழ்ச் சங்கத்தில் உலக மகளிர் தினவிழாவில் 09-03-2023 அன்று **மணிமேகலை விருது** வழங்கியுள்ளது. சர்வவியாபியின் எழுத்தாளர்கள், வாசகர்களின் சார்பாக மனமார வாழ்த்துகின்றோம்.

– ஆசிரியர், இணை ஆசிரியர்.

## மறைமாநில குருக்களுக்கு அழைப்பு

அன்புமிக்க சகோதர குருக்களே! உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம்.

மிஷன் அச்சக வளர்ச்சியிலும், சர்வவியாபி வார இதழ் தரத்தில் உயர்வதற்கும் தங்களின் மேலான ஒத்துழைப்பிற்கு நன்றிகள். ஒரு சில அருட்தந்தையர்கள் ஞாயிறு வாரச் சிந்தனைகளை சர்வவியாபியின் வழியாக பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு நம் மனமார்ந்த பாராட்டுக்கள்.

புது முயற்சியாக 2024 ஆம் ஆண்டு திருவழிபாட்டு வாசகக் கையேடு **(Bible Diary)** வாசகங்களை ஒட்டிய சிந்தனை பகிர்வோடு நாம் தயாரித்து வெளியிடலாம் என்ற எண்ணம் நம் குருக்கள் ஒரு சிலரிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்டது. அதற்கான முன் தாயாரிப்பு, முயற்சிகளை நாம் இப்போதே தொடங்கவேண்டும். வாசகங்கள் ஒட்டிய சிந்தனைகளை வழங்கி இம்முயற்சி வெற்றி பெற உதவிடும்படி கேட்டுக் கொள்கிறோம். ஆர்வம் உள்ள அருட்தந்தையர்கள் தங்கள் ஒப்புதலை இம்மாதம் 26 ஆம் தேதிக்குள் அருட்தந்தை **L. ஆரோக்கியதாஸ்-ன்** கைபேசி 9578839605 எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

இவண்,

**மேலாளர், மிஷன் அச்சகம்.**

## நன்றி நவிலல்

சர்வவியாபி நடத்துநர் அவர்களே! இவ்வார இதழ், என் வாழ்வில் ஒன்றிய ஒன்று. எனக்கு இறையாசீரும், விவி-ய அறிவும் ஊட்டும் உன்னத வார இதழ். மேலும் இதில் மாதா மாதம் நடத்தப்படும் விவி-ய குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொண்டு தொடர்ந்து முதல் பரிசை பெற்றுள்ளேன் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாராபுரம் சகோ.ஜேம்ஸ் அவர்களுக்கும் நன்றி!

இயேசுவுக்கே புகழ்!

இவண்

S. அருள்மேரி Rtd. lecturer திருக்கனூர்.

**Published and Printed by** Very Rev. Msgr. A. Arulanandam **on behalf of Most Rev.** Dr. FRANCIS KALIST,
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.